2005 பிப்ரவரி 3]

32—

மென்பொருள் உற்பத்தி மையம்

***31790—திரு. என்.கே. பெருமாள்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டத்தில் கணினி மென்பொருள் உற்பத்தி மையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தூத்துக்குடி மாவட்டத்தில் கணினி மென்பொருள் உற்பத்தி மையம் அமைத்திட அரசிடம் தற்போது திட்டம் ஏதுமில்லை.*

(ஆ) வினா எழாது.

திரு. என்.கே. பெருமாள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குடிநீருக்காக வல்லநாட்டை மையமாக வைத்து, என்னுடைய விளாத்திக்குளம் தொகுதியில் 171 கிராம மக்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 68 கோடி வழங்கிய அம்மா அவர்களை என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக முதலில் வணங்கி என்னுடைய கேள்வியைக் கேட்கிறேன். மனிதனுக்கு இதயம் எவ்வளவு முக்கியமோ, அதேபோல் இன்று எல்லா வகையிலும் மிக முக்கியமானது கணினி ஆகும். குறிப்பாக, கணினி மென்பொருட்கள் அனைத்தும் வெளிநாடுகளிலிருந்துதான் தயாரிக்கப்படுகின்றன. கணினி மென்பொருட்கள், தமிழ்நாட்டில் குறிப்பாக, தூத்துக்குடி மாவட்டத்தில் தயாரிக்கப்பட வேண்டும். அதன்மூலம் பல்லாயிரக்கணக்கான பொறியாளர்கள் பயன்பெறுவார்கள். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொற்கால ஆட்சியில், மறுபரிசீலனை செய்து தூத்துக்குடியில் கணினி மென்பொருள் உற்பத்தி மையம் அமைக்க ஆவன செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

[2005 பிப்ரவரி 3

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கணினியினுடைய இன்றியமையாத தன்மை, வாழ்க்கையில் அது எவ்வாறு பின்னிப் பிணைந்திருக்கிறது என்பதை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். "If you ignore computer, computer will ignore you" என்கின்ற அடிப்படையிலே இனிமேல் வாழ்க்கையோடு ஒன்றிவிட்ட நிலையிலே கணினி இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. இந்த 3-1/2 ஆண்டு காலத்திற்கு முன்பாக இருந்த நிலையை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கிட்டத்தட்ட 3-வது நிலையிலே, 3 வது நிலைக்கு முன்பாக அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்பதற்கு முன்பாக இருந்தது. அதாவது கர்நாடகம் முதன்மையாக இருந்தது. ஆந்திரம் இரண்டாவதாக இருந்தது. மூன்றாவதாக தமிழ்நாடு இருந்தது. ஆனால் இதை முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்கின்ற மனப்பான்மையோடு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக 8,000 கோடி ரூபாய்க்கு மென் பொருள் ஏற்றுமதி செய்து ஒரு பெரிய சரித்திர சாதனையை நம்முடைய தமிழகம் பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஆந்திரா நமக்குப் பின்னாலே சென்று விட்டது. கர்நாடகத்தை beat செய்வதற்கு இன்னும் ஓராண்டு இருக்கிறது. இந்த ஓராண்டிலே கர்நாடகத்திற்கு முன்பாக இருந்து (குறுக்கீடு) கர்நாடகத்தை overtake செய்து முதல் நிலை என்கின்ற ஒரு பெருமையை, நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு, அம்மாவின் வழிகாட்டுதலின்படி அடையும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1999 ஆம் ஆண்டு, 2000 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் 500 மென்பொருள் நிறுவனங்கள் இருந்தன. ஆனால், இன்றைக்கு அம்மா அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட மென்பொருள் நிறுவனங்கள் அமைக்கப்பட்டு தமிழ்நாடு முதன்மையை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. நேற்றைக்கே என்னுடைய பதிலில் சொன்னதுபோல, அமெரிக்காவில் Harvard University, இன்றைக்கு இந்தியாவிலேயே, தமிழ்நாடு முதன்மை பெறுகின்ற ஒரு நிலைமை என்கின்ற ஒரு observation-ஐத் தந்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இன்னொரு முக்கியமான விஷயத்தை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக W.T.O. - World Trade Organisation

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2005 பிப்ரவரி 3]

அடி வாங்கிய உடனேயே, நம்முடைய தமிழ்நாட்டிலிருந்து, அதுவும் இந்தியா என்று சொல்லும்போது தென்னாட்டிலிருந்துதான் அதிகமான அளவுக்கு, வெளிநாட்டுக்கு வேலைக்குச் செல்கின்றார்கள். அதிலும், நம்முடைய தமிழ்நாட்டிலேதான் கணினியை அறிந்தவர்கள் முழுமையாக இருக்கின்ற காரணத்தினால், இங்கிருந்து போகின்றவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், அங்கே அடி வாங்கிவிட்டதன் காரணமாக வேலைவாய்ப்பு போய் விட்டது. எனவே, அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரவேண்டுமென்ற மனப்பான்மையோடு—Business Process Outsourcing —அதாவது வணிக செயல்பாட்டுச் சேவை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தி, அதில் சென்னை மட்டுமே மையமாக இருக்கக்கூடாது; தமிழகத்திலே கோயமுத்தூர், திருச்சி, சேலம், மதுரை மற்றும் திருநெல்வேலி போன்ற இரண்டாம் நிலை நகரங்களும், அதோடுமட்டுமல்லாமல், மூன்றாம் நிலை நகரங்களான திருப்பூர், ஓசூர், சிவகாசி போன்ற மூன்றாம் நிலை நகரங்களும் அதிலே சேர்க்கப்பட வேண்டுமென்று அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அதன் அடிப்படையிலே ஆய்வு நடத்திக்கொண்டு வருகின்றோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், தூத்துக்குடியிலே அவர்கள், தனியார் அந்த கணினி மென்பொருள் உற்பத்தி மையம் ஆரம்பிக்க முன்வந்தால் அரசு நிச்சயமாக அதற்கு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெருமாள்

திரு. என்.கே. பெருமாள்: மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 33, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

33—

உரத் தொழிற்சாலை

***26469-திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—